23.02.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை . (ஒ.எஸ்.எண். 35/2022 ) திரு.ஹரிச்சந்திரன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) பி.வா.சா.ஆ.7 ஆதாரர் அடையாள அட்டையில் எனது பிறந்த தேதியாக 1971 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1960 ஆம் ஆண்டு தபசில் சொத்தை சுடலைமாடி சூரனிடம் கிரையமாக கொடுத்தது எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான் எனது அப்பா சொல்லி தெரியும். 1960 ஆம்ஆண்டு சுடலைமாடி சூரனுக்கு கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சுடலைமாடி, ராமன் என்ற ராயப்பன் ரூ.300/-க்கு அடமானம் கொடுத்து மேற்படி ராமன் என்ற ராயப்பன் என்பவர் சூரனுக்கு ரூ.700/-க்கு அடமானம் கொடுத்துள்ளார். எனது நிருபண வாக்குமூலத்தில் சுடலைமாடி என்பவர் சூரனுக்கு கிரையம் கொடுத்தாக சொல்லியுளளேன் என்றால் கிரையம் கொடுக்கவில்லை சுடலைமாடி என்பவர் ராமன் என்ற ராயப்பனுக்கு அடமானம் கொடுத்துள்ளார். வாதிகள் இலங்கையில் வசித்து வந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். பொன்னியா என்பவரை தெரியுமா என்றால் எனக்கு பாட்டி முறை. பொன்னியா என்பவர் சூரனின் மனைவி என்றால் சரிதான். மேற்படி பொன்னியா வாதிகளின் பாட்டி திருமதி.பரமேஸ்வரி என்ற ஈஸ்வரியின் உடன்பிறந்த சகோதரி என்ற விவரம தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிகள் 1980 ல் இந்தியாவுக்கு வந்த விவரம் தெரியுமா என்றால் இந்தியாவுக்கு வந்த விவரம் தெரியும் 1980 ல் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. 1980 முதல் தாவாச்சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை நாங்கள் தான அனுபவம் செய்து வருகிறோம். சுடலைமாடியின் கணவர் பெயர் பரமசூரியன் குடும்பன் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பரமசூரியன் குடும்பன் 1980 ல் காலம் சென்றுவிட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சுடலைமாடி-பரமசூரியன் குடும்பன் ஆகியோர்களுக்கு நேரிடையான வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். அதனால்தான் தபசில் சொத்துக்களை சுடலைமாடியின் உடன்பிறந்த சகோதரர் சுடலைமுத்து என்ற சொள்ளமுத்தின் வாரிசு சண்முகத்திற்கு வாரிசு அடிப்படையில் வந்தது என்றால் தவறு சுடலைமாடியின் உடன்பிறந்தவர் சுடலைமுத்து என்ற சொள்ளமுத்து கிடையாது.

2) சுடலைமாடியின் உடன்பிறந்த சகோதரர் சுடலைமுத்து என்ற சொள்ளமுத்துவின் வாரிசு சண்முகத்திற்கு தாவாச்சொத்திற்கான பட்டா எண்.866

வழங்கப்பட்டள்ளது என்று சொன்னால் யூ.டி.ஆரில் சும்மா மாற்றம் ஏற்பட்டுள்ளது பத்திரம்எதுவும் கிடையாது. பி.வா.சா.ஆ.3 சூரன் என்பவர் மேடோவர் அடமானம் பெற்ற ஆவண எண்213/1959 ன்மூலம் அடமானத்திற்காக தொகையை வசூல் செய்வதற்கு சட்டப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால சரிதான் அடமானம் திருப்பவில்லை. அந்த அடமானப்பத்திரத்தின் மூலம் சூரன் என்பவருக்கு அடமானத்தொகையை மட்டுமே வசூல்செய்ய உரிமையுள்ளது என்று சொன்னால் வாரிசே இல்லை என்பதால் வசூல் செய்ய முடியாது. அவ்வாறு எந்த நடவடிக்கையும் சூரண் எடுக்காமல் சூரண் எனது அப்பாவுக்கு எந்த சட்டப்படியான கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆவண எண்.285/1977 ஆவணம் செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.பி.வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீது 2023 ஆம் ஆண்டிற்குரியது என்றால் சரிதான். அதில் யாருடைய பெயர் போடப்பட்டுள்ளது என்றால் வேலு பெயர் போடப்பட்டுள்ளது. அந்த சொத்து மொத்தம் 2 ஏக்கர் 15 செண்டு கீழ்புறம் சிவனைந்தான் என்பவர் 1 ஏக்கர் 7 செண்டு கிரையம் பெற்றுள்ளார், மேல்புறம் 1 ஏக்கர் 8 செண்டு சூரண் என்பவர் ராமச்சந்திரனுக்கு கிரையம் கொடுத்துள்ளார். 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் எந்த தீர்வையும் போடவில்லை என்றால் நாங்கள் தான் பயிர் செய்து கொண்டியிருந்தோம் வேலு பெயருக்கு தீர்வை இருந்ததால் நாங்கள் தீர்வை போடவில்லை. எனது அப்பா இராமச்சந்திரன் பெயருக்கு தீர்வை போடவில்லை என்றால் அடங்கலில் வேலுபெயர் இருப்பதால் அவர் பெயர் இருப்பதால் தீர்வை செலுத்த முடியும் என்பதால போடவில்லை. பி.வா.சா.ஆ.6 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால சரியல்ல. 05.06.2021 ல் தபசில் சொத்தில் அத்துமீறி நுழைந்ததால் 5 ம் வாதி சந்திரா கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் எனக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால பொய் புகார் கொடுத்தார். காவல்துறை விசாரணையில் என்னையும், எனது அப்பாவையும் கண்டித்து அனுப்பினார்கள் என்றால் தவறு கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து சொத்து இராமச்சந்திரனுக்கு பாத்தியம் என்பதால் அதைமுடிக்கப்பட்டது. இச்சம்பவத்திற்கு பிறகு மோசடி கிரையப்பத்திரம் எண்.285/1977 பி.வா.சா.ஆ.4 இந்தவாதிகளுக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் இந்த வழற்கிற்காக சொல்லப்பட்டுள்ள பொய்யான சங்கதிகள் என்றும் எனது வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.02.2026.